# தேவீ கீர்த்தனைகள்

1919
7840954

1214



ஸ்ரீ சாரதாம்பாள்

OFFICE OF THE REGISTRAR
5 OCT 1926
MADRAS

இரண்டாம் பாகம்.

...தை இயற்றியது

Q25:417
N26
176450

# தேவீ கீர்த்தனைகள்.

## இரண்டாம் பாகம்.

OFFICE OF THE REGISTRAR
5 OCT 192
MADRAS

### விநாயகர் துதி.

1 மலைமகள் மகிழ்வடைய மாணிக்கமாயுதித்த
தலைமகன் தாளிணையை தாழ்ந்தே பணிந்தேன்
கலை பெருக நிலையுறுக கண்டிடத்தாயருளும்
வலையொத்தமாயை நீக்கி வழியவனளித்திடவே

2 வேழ முகத்தோனை விரும்பியே அடிபணியும்
ஏழை முகம் பார்த்து ஏற்றிடுவன் உயர்பதவி
ஆழவே அருள் வெள்ளம் அருந்துணையாகிடுவன்
வாழவே வழியளித்து வழங்கிடுவன் கருணைமாரி

---

### முருகன் துதி.

1 அன்னை மடிமீது அமர்ந்தே விளையாடும்
மன்னவனும் முருகன் மலரடிப்பதமதனை
என்னகத்தில் வைத்தே ஏற்றியே போற்றிடுவேன்
தன்னருளளித்து நல்தாயருளும் பெருகிடவே

---

ரா—செஞ்சுருட்டி.

பல்லவி.

அம்பாளைப் பாராமலிருப்பேனோ
அரிதான ஜென்மத்தைக் கெடுப்பேனோ

சரணங்கள்.

1 சித்தமுமங்கே சடலமுமிங்கே
உத்ததுணையும்—உயிர்நிலையுமங்கே (அம்பா)

2 நாட்டமுமங்கே—நடமாட்டமுமிங்கே
வாட்டங்கள் தீரும்—வழியதுவுமங்கே (அம்பா)

3 உற்றபொருளங்கே—சுற்றம்பகையிங்கே
கற்றும்பலனென்ன—கலக்கமே தானிங்கே (அம்பா)

---

ரா—இந்துஸ்தான்.

பல்லவி

தேவியருள்தரவா—சுகஜோதியருள்தரவா—மகா
தேவியருள்தரவா

76450

சரணங்கள்.

1 சக்கர நிலையாகி—சாந்தமாம் வடிவாகி
அக்கரப் பொருளாகி—ஆனந்தம் தந்திடும் (தேவி)

600008

ஆலமுண்டகண்டன்—ஆனந்தமாகிட
கோலமாய் பாகத்தில்—கூட அமர்ந்திட்ட (தேவி)

3 காமனையெரித்திட்ட—கண்ணுளான் மகிழ்வுற
சோமசுந்தரியாய்—சூழ்ந்தெங்கும் காத்திடும் (தேவி)

4 புன்சிரிப்பதனால்—புரமூன்றெரித்த சிவன்
கண்மணியாகியே—காக்கவே யமர்ந்திட்ட (தேவி)

5 மறலியை யுதைத்திட்ட—மாதேவன் நிதியாகி
அறங்களும் வளர்ந்திட—அவனியில் வந்திட்ட (தேவி)

---

ரா—ஆனந்தபைரவி

பல்லவி.

மாயை விட்டு விடடி—மாயை யெட்டா
தாயடியைச் சேர்ந்து நில்லடி

அநுபல்லவி.

ஆதியற்ற பேயிது—அல்லலாட்டமாட்டிவிடும்
நீதி வழியறிந்தபோது—நில்லாது ஓடி விடும் (மா)

சரணங்கள்.

1 கயிற்றினில் அரவம் காட்டிடும்—கானலில் நீரும்போல
கல்பிதமாக்கும்—கட்டையை ஆளாக்கும்
கண்டறிவதெல்லாம் நிஜமாக்கும்—கண்மூடி
விழுவோரை கலங்கியே ஆடச்செய்யும் (மா)

2 இல்லாத ஜகத்தை யிதுவும்—இருப்பது போல்
எடுத்துக்காட்டிடும்—நில்லாமைக்கேயழுது
நெடுந்தூரம் ஏங்கச்செய்யும்—வல்லாமை
யற்ற பேரை வழி விடாது உண்டு விடும் (மா)

3 இந்திரஜாலமாகிடுமிது—இந்த உடலும் கர்மானு
சாரமாகிடும்—மந்திர மூலமதினாலே மகா குரு
அருளாலே மாதாவின் பாதம் காண
மாண்டிடுமிந்த பேயும் (மா)

4 காலமும் வீணாகிப்போச்சுதே—கோலமாம் நம்
மாட்டமுமே ஓயலாச்சுதே—வாட்டமேயடை
யாமல் இதன் வாய்ப்பட்டு வருந்தாமல்
நாட்டமாய் அம்பாளை நாடி ஓடிடுமே (மா)

5 அருமையான ஜன்மமாச்சுதே—ஆறறிவும்
கூடவாச்சுதே—மறுமையை பழையாமல்
மாயையும் நுழையாமல் அருள்தரும் அம்
பாள்பாதம் அபயமென்றே பணிந்திடாய் (மா)

6 சொப்பனத்தின் நிதியாகுமே—இதன் ரஸம் கூறு
மெட்டிக்கனியாகுமே—குக்கலெடுத்தகக்

லைப்போல் இதன் பக்கமே பாருது—உள்
பக்கமாக ஓடிப்போய் உறைந்திடாய் தாயிடமே (மா)

---

ரா—சஹாரு.

பல்லவி.

ஆதி பரா சக்தி தாயேயுனை அண்டினேன்
நானுந்தன் சேயே
அடைக்கலம் காத்திடுவாயே
கடைக்கண்ணாலருள் தருவாயே.

சரணங்கள்.

1 அன்னையே யென்தனை பார்ப்பாய்
ஆதரவாகவே காப்பாய்
இன்னமும் பிறவாதிருக்க எழில் மலரடி
தன்னிலே சேர்ப்பாய் (ஆதி)

2 நான் படும் பாடுகளம்மா
நவிலும் பஞ்சிலுமிஞ்சியதம்மா
ஏன் படுகின்றாயென்று நீயுமிரங்காவிடி
லெனக்கேது கதியம்மா (ஆதி)

3 ஆரெந்தன் வேறு கதியம்மா
அறிந்தவுனக்குச் சொல்லவோ சும்மா
திரெந்தன் கவலைக்கடலெல்லாம்
திருவடி தந்தென்னை யாளம்மா (ஆதி)

---

ரா—பைரவி.

பல்லவி.

பவானி பவானி பவானி என்றுரைக்க
பரமார்த்த நிலையாகுமே.

அனுபல்லவி.

ஜனனபயநீங்க ஜன்மமுமீடேற
மனனம் செய்தே நாம் மகிழ்வாம் பதம்பெற (பவா)

சரணம்.

நாதாந்த ரூபிணீ ஜகநாட்டிய காரணீ
வேதாந்த வீதிமேவும் வித்யா விநோதினீ
போதமளித்திடப் பொருந்தும் நல்குருரூபிணீ
ஏகாந்தமாகவே எப்போதுமுரைக்கநல் (பவா)

---

ரா—இந்துஸ்தான்-தாஜருஜ

நடனருஜ ருஜனுகந்த ராஜ ராஜ ஈசுவரி
நம்பியே வந்திட்டேன் சொந்தமா யெந்தனை ஆதரித்திடாய்
வம்பதில் நொந்து வறுமையில் வெந்து வந்தேனுன்பாதம்
அம்புஜபாதத்தை அனுதினம் போற்றி பாடினேன் நல்கீதம்
உம்பர்கள் போற்றிடும் தேவியே யெந்தனுக்களித்திடாய்
நல்போதம்
இகபர சுகமாகும் பொருளுநீ யென்றுமே
பாடுதே நால்வேதம்- பாடுதே நால்வேதம் - பாடுதே நால்
வேதம்.

---

ரா—நாட்டைக் குறிஞ்சி.

பல்லவி.

எக்காலத்திலு மறவேனே—இனிநானே

அனுபல்லவி.

அக்காலத்தில் நவராத்திரியில்
அன்னையைப் பார்த்துநான் ஆனந்தமானதை (எக்)

சரணங்கள்.

1 மறையையும், பாடுமுறையையும், மகிழ்பரையையும்
பவகரையையும், மூவோர் குறையையும், தேவர்
திரையையும், அசுரர் அறையையும் அகமகிழவே நான்
(எக்)

2 யோகத்தையும், அன்பர் தாகத்தையும், அவள் வேகத்
தையும், அருள் போகத்தையும், ஈசமோகத்தையும்,
வாமபாகத்தையும், அந்த ஏகத்தையும், ரஸசோகத்
தையும் நான் (எக்)

3 குணத்தையும், சக்ரவனத்தையும் நல்மணத்தையும்,
அந்த தனத்தையும், பூதகணத்தையும், புகழ் கனத்
தையும், அன்பஜனத்தையும் எந்தன் இனத்தையும்
நான் (எக்)

---

ரா—பரசு.

பல்லவி.

எப்போதிரங்குமோதான்—என் அன்னையே உந்தன்
மனம்

சரணங்கள்.

1 ஒப்பில்லா மாணிக்கமே உயர்வான ஜோதியே
தப்புக்கள் செய்திட்டாலும் (மிக) க்ஷமித்தென்னை
யாண்டிட (எப்)

2 மந்தமதியினேன் எந்த வழியறிவேன்
மார்ஜ்ஜார நியாயம் போல் (சொல்) மகிழ்ந் தென்னை
யாண்டிட (எப்)

---

ரா—பியாக்

பல்லவி.

த்ரிபுர சுந்தரிக்கேதிவ்யமாம் ஹாரத்தி
த்ருஷ்டிகள் நீங்கிட சுற்றியெடுப்போம்

1 அழகுக்கிருப்பிடமாம் அத்புதரூபத்தை
பார்த்தபேர் ஏங்கின கண்ணேறு நீங்கவே (த்ரி)

2 சுண்ணும்புடன் மஞ்சளும் சேர்த்துக்கரைத்து
பொன்னான தாம்பாளத்தில் பொருந்தும் சூடமு
மேற்றி (த்ரி)

3 முகத்திற்கு சந்திரனும் புன் முறுவட்கு மூன்றுலகும்
சுகத்துக்கு தென்றலும் ஜோதிக்கு முச்சுடரும் (த்ரி)

4 பார்வைக்கு பரமனும் பாதத்திற்கு தாமரையும்
கோர்வைக்கு மறையும் குளிர்ச்சிக்கு கங்கையும் (த்ரி)

5 உருவத்திற்கு மன்மதனும் புருவத்திற்கே வில்லும்
அருளுக்கு மூவோர்களும் ஆவலாய் கண்பட்டார் (த்ரி)

---

ரா—காவடிச்சிந்து

1 அன்னையே யின்னமும் கன்னி யெனமறை பேசுவ
தாலோ
முன்னமலையரையன் வளர்த்ததனாலோ நீ
இன்னமுமிரங்காது
என்னையும் பாராது-வர்மமோ-யிது தர்மமோ

2 நெருப்பான மேனியர் உன்னுடல் பாதியாய்—இருப்
பதினாலோ
வெருப்பான பூதகண மிருப்பதினாலோ—எனக்கு
ஒரு பதமோதாது
திருப்பாதம் காட்டாது—இருந்தாய்—என்னை மறந்தாய்

3 மணமாகும் மலரே மகத்தான ஜோதியே—இது
நீதியோ
இனமான எந்தன் மேல் — வாதமோ — அருள்
கல்பகதருகண்டும்
அல்பமாயலைந்திடல் முறையோ—எந்தன் குறையோ

4 சந்தர கலாவதி சாந்தகுண நிதியே—சார்ந்திட்டேன்
அரவிந்தமலரடி சேர்ந்திட்டேனே—எனை
சொந்தமாயெண்ணியே
அந்தமாம் அன்னையே காப்பாய்—பாதம் சேர்ப்பாய்

---

ரா—இந்துஸ்தான்

பல்லவி.

அன்னையைத்தவிர ஆதாரமெங்குமுண்டோ (நமக்கு)

சரணங்கள்.

1 சக்தியில்லாவிடில் சலனமுமில்லை யென்று
சாற்றுதே நான் மறையும்—அ-ஆ—போற்றுதே எப்
பொழுதும் (அ)

2 காமேசுவரிதன்—கடைக்கண்ணின் பார்வைக்கு
பார்த்திருக்கார் அந்த மூவோர்—அ-ஆ—காத்திருக்
கார் கோடி தேவர் (அ)

3 ஜோதியிலோர் துளி—பெற்றிட சூர்யனும்
ஓதிப்பணிந்து நின்றான்—அ—ஆ—சுகமதியுமே வணங்கி
நின்றான் (அ)

4 பாத ஒளியில்-பறந்திடும் தூசு பெற
பார்த்துப்பணிந்திட்டானக்கினி — அ-ஆ — ஏற்றி
வணங்கலுற்றான் (அ)

5 அழகுக்கிருப்பிடத்தை-பார்த்தந்த மன்மதனும்
அருவமே யாகிவிட்டான்—அ-ஆ—சொரூபமேயற்று
விட்டான் (அ)

---

ரா—கருடத்வனி.

பல்லவி.

ஆனந்த ஸாகரமே யிதுவே அழிவற்ற பிரம்மானந்த

அநுபல்லவி.

ஹம்ஸ: லோகமாம் ஹம்ஸ தம்பதிகள்
அடிபணிந்து போற்றி அருள் பெற பாடும் (ஆன)

சரணங்கள்.

ஸ்ரீசக்ரந்தன்னிலே சிறப்பாக வீற்று சிந்திப்
போர்க்கருள் சொந்தமாய் தந்து
ஹ்ரீங்காரமாக ஹ்ருதயத்திலே மேவி ஆதாரமாக
அழியாதருளும் (ஆன)

---

ரா—ஜாவளி இந்துஸ்தான்.

பல்லவி.

தாயே உன் பாதம் தஞ்சமானேன்
அஞ்சலகற்றிடுவாய்

அநுபல்லவி.

பஞ்சையான எனைப்பார்த்து கொஞ்சம் அருள் செய்
வாய் (தாயே)

சரணங்கள்.

1 வஞ்சமனவாதனைக்கும் வன்பிறவி வேதனைக்கும்
அஞ்சியே நான் ஓடி வந்தேன் ஆதரித்தே காத்திடு
வாய் (தாயே)

2 நீயே என்னைப்பாராவிடில் தாயே கதியேதெனக்கு
மாயவலையை நீக்கியேதான் மலரடியை தந்திடுவாய்
(தாயே)

---

ரா—காம்போதி.

பல்லவி.

இன்னமும் பராமுகமே ஆகுமோ தானெந்தன் அம்மா
என்னமோவென்றிருந்தால் நீயும் ஏதோ கதி சொல்லி
டுவாய்

சரணங்கள்.

1 எத்தனை நாட்செல்லுமோவென்று ஏங்குதே நெஞ்சம் எந்தனம்மா
அத்தனையுமறியாயோ நீ எள்ளத்தனையிரக்கம் செய்வாய் (இன்)

2 பந்தமான உறவு எல்லாம் சொந்தமாமோ சொல்லிடுவாய்
இந்தவிதமே நீயே யிருத்தல்-ரீ- விந்தையே யானென் செய்வேன் (இன்)

3 கருணாநிதியல்லவோ நீ யெனைக்காக்க மனம் வல்லையோ
தருணமிது வல்லவோ -ரீ- தயவுடனே சொல்லிடுவாய் (இன்)

4 ஒரு வழியும் அறியேனே யான் உந்தனை அணுகிடவே
திருவுளமிரங்கிநீயே-ரீ-தீனயான எனைகாப்பாய் (இன்)

---

ரா—தன்யாசி.

பல்லவி.

நாயினு மிழிவான நலமற்ற பிறவியால்
பயனேது முண்டோ கூறாய்

சரணங்கள்.

1 நாயாகினும் செய் நன்றி யறிந்திடும்
தாயே உன்னருளை கனவிலு நினையாது (நாயி)

2 ஊணுக்கலைவதும் உறங்கியே யழிவதும்
வீணுக்கு வினைகளை விரைவுடனேற்றிடும் (நாயி)

3 ஒன்றுவிட்டொன்றைப்பற்றியேயுழல்வதும்
நன்று தீதறியாது நானென்றே மாள்கின்ற (நாயி)

4 வெறும்போகமே யெண்ணி பெருரோகமணிவதும்
வேகமாய் நரகத்தில் வீழ்ந்துமே தவித்திடும் (நாயி)

5 பாசபந்தங்களை மோசமாயேற்றிடும்
நாசமாம் மனதின் தாசனுயழிந்திடும் (நாயி)

6 மானிட ஜன்மத்தை மதியற்றழித்துமே
தானென்றே வினை சக்ரம் தவிக்கவே சுழன்றிடும் (நாயி)

7 நினைவான நித்யங்கள் கனவாக கண்டிட்டும்
துணையாகும் நின் பாததொண்டுமே புரியாத (நாயி)

8 பேயாயினுமொரு பெரியோர்க்கடங்கிடும்
மாயமனமதுவும் அடங்கிடாதழித்திடும் (நாயி)

9 எங்குமாய் எல்லாமாய் இருந்தருள் நின்னை
கங்குல்பகலாக களிப்புடன் துதியாது (நாயி)

10 எவ்வித முய்வேன் எவ்வண்ணம் அருள் பெறுவேன்
எவ்விதமாகிலும் இரங்கியே காத்திடுவாய் (நாயி)

---

ரா—பாலபிஷேகபழனிமலை.

பல்லவி.

காத்திடும் ஏழையைப் பார்த்திரங்கி பாதம்
சேர்த்திட ஓர் மொழிசெப்புவாயே-தீர்த்திடகவலையும்
பேர்த்திடமாயை — திருவருளெந்தனுக் கருள்வாய்
தாயே

சரணங்கள்.

1 அலை அலையாகவே பிறவியுமெடுத்து
வலை வலையாகவே மாயையும் அடுத்து
நிலையான உன்பாதம் நினைத்துமே உருகி
மலையான என்பாவம் தீர்த்திட அருகில்

வந்தேனே யெந்தனை அந்தமாம் தாயே
சொந்தமாயெடுத்துமே பந்தம் தீர்ப்பாயே (கா)

2 அதிவீர தீர கம்பீர ஒய்யாரி
அருண் மேகமாகியே பொழி கருணைமாரி
அற்புதமான ஸ்ரீசக்ரசிங்காரி
பொற்பாதம் நம்பினேன் அருள் புவனேச்வரி
தாயே-யெந்தனை-தானுள்ளம் நினைப்பாய்
ஓயாத பவத்துன்பம் ஓடுங்கிடபார்ப்பாய் (கா)

3 பாசம் விட்ட யோகியர்பற்றும் குண்டலினீ
ஈசனுமகிழ்ந்திடு கேசமனோன்மணி
மோசமா முலகத்தில் ஆசையாய் சுழன்றே
தாசன் தவித்திடும் தாபம் தீர்ப்பாயே
கோமள நேத்ரத்தால் கொண்டருள்வாயே
தாமரைப் பாதத்தை தந்திடு தாயே (கா)

---

ராக—அடாணா.

பல்லவி

தயவு செய்வாயே தாயே யெந்தனிடம்

சரணங்கள்.

1 தயவு செய்திடுவாய் தவித்திடு மெந்தனுக்கு
அயர்ந்து போகுமுன் அபயம் தந்தேனென்று (தய)

2 நினைப்பு மறப்பும்போல்—பிறப்பு மிறப்பாகும்
கனவாகும் வாழ்விதில் கலங்கி தவியாது (தய)

3 மானினம் பிரிந்தாற்போல் மங்கையும் வாடியே
தான்வலைப் பட்டாற்போல் தவிப்பது நீக்கவே (தய)

4 இருளது நீங்கவே என் முன்னுதித்து
மருளது போக்கியே மலரடியளித்திட (தய)

5 கானலின் நீரொத்தகல்பித பிரபஞ்சத்தில்
நானென்ற நாட்டத்தால் நடுங்கியழியாது (தய)

---

ரா—இந்துஸ்தான்

பல்லவி.

மலைமகளே உந்தன் மனதுமே நல்லோ
அலைந்து தவிக்குமென்னை ஆண்டருள் புரியாது

சரணங்கள்.

1 துஷ்டப்பிள்ளை யென்றே தள்ளுவளோ தாயும்
கஷ்டமாம் குஞ்சு என்றே கைவிடுமோ பறவை (மலை)

2 தாயிருக்கச்சேயும் தவித்தலும் நீதியோ
காயிருக்க கனமும் ஆகுமோ தருவிற்கும் (மலை)

3 கன்றுக்குச்சேதாவும் கனமடி சுரவாதோ
நன்றாமோ யெந்தனுக்கு நல்லருள் தந்திடாது (மலை)

4 சர்வஜகன்மாதா அல்லவோ நீயுமே
சர்வ உயிர்களும் சரணமாமிடமன்றோ (மலை)

5 பெற்றவளே யெந்தன் குற்றத்தைத்தள்ளியே
உற்றென்னை நோக்கியே ஓர் மொழி கூறாது (மலை)

6 தர்மமோ உனக்கிது தயாநிதியல்லவோ
வர்மமோ அல்லதெந்தன் கர்மமோ அறியேன் (மலை)

7 வாடுமென் வாட்டத்தின் வகைய தறிந்திருந்தும்
தேடுமென் முன்னால் வந்து திடனளித்திடாது (மலை)

8 அன்னையே உன்னையெண்ணி அலைந்திங்கு வாடுறேன்
என்னையும் இரங்கி பார்த்து எழிலடி தந்திடுவாய் (மலை)

---

**ரா—இந்துஸ்தான்-ஜாவளி.**

பல்லவி.

தாயுமின்னம் வரக்காணேன்—தாமதமேனோ

சரணங்கள்.

1 காலமும் வீண்போகுதெந்தன்—கண்ணிரண்டும் சோருது (தாயு)

2 திடனழிந்து போகுதெந்தன்—தேகமுமே தளருது (தாயு)

3 வரவேற்கும் வாழை தோரணம்—வாடியே தாளுடுது (தாயு)

4 மாலையுமே வாடிப்போகுது—மாமயிலே போயுரையாய் (தாயு)

5 அரைத்த மஞ்சள் அலர்ந்துபோகுது—அன்னமே நீயங்கு சொல்வாய் (தாயு)

6 கந்த மதுவும் காய்ந்து போகுது—கானக்குயிலே கண்டு கூறாய் (தாயு)

7 மதியொளியும் மங்கிப்போகுது-மயங்குதே யென்னறிவும் (தாயு)

8 தென்றலுமே திரும்பிப்போகுது திகிற்படுதென் னெஞ்சமும் (தாயு)

9 தீபவொளியும் அடங்கலாயிற்று—தீனையானுமென்ன செய்வேன் (தாயு)

10 அன்னங்களும் ஆறிப்போகுது—அன்னையே நீ வந்திடுவாய் (தாயு)

ரா—ஸோட்.

## பல்லவி.

அன்னை வருதருணம்—ஆயிற்றெந்தன் மனமே
இன்னமும் ஏனோநீ—இவ்விதமிருக்கின்றாய்

## சரணங்கள்.

1 ஊக்கமாக எழுந்திரு—உண்மையுடனுழைத்திடு
நீக்கலான குப்பையெல்லாம்—நீக்கியே எறிந்திடு (அ)

2 நிர்மலமாம் நீரெடுத்து-அலம்பியே மெழுகிடு
நிஷ்களங்கமாகவேநீ- கூட்டிப்பெருக்கிடு (அ)

3 வெண்மையான மாவதனால்—விசித்ர கோலமிட்டிடு
நன்மையானகாவியிட்டு-நலமாம் பந்தல் போட்டிடு(அ)

4 அத்புதமாம் அலங்காரங்கள்—அன்புடனே செய்திடு
தத்பதமாம் தேவிவா—தகுந்த பன்னீர் தெளித்திடு(அ)

5 உத்தமமாம் ஊதுவத்தி—சுற்றிலும் சொருகிடு
சுத்தமான தைலம்விட்டு—ஜோதிவிளக்கேற்றிடு (அ)

6 ஹ்ரீங்கார சிம்மாசனம்—எழிலுடனே போட்டிடு
பாங்காயமர தாமரையை—பதமாகப்பரத்திடு (அ)

7 வாட்டமில்லாமலர்களெல்லாம்-வகையுடனேவைத்திடு
கூட்டமான பேர்களெல்லாம்—கோபத்துடனொதுக்
கிடு (அ)

8 நல்லபழங்கள் தேங்காயதுவும்-நாட்டத்துடன் வைத்
திடு
சொல்லுகின்ற ஜோதியான—கர்ப்பூரமும்வைத்திடு(அ)

9 திருவிளங்கும் அம்பாள்பாத—திருஷ்டிகளும் நீங்கிட
இருபொருளுமொன்றேயாகும் — இலங்குமாரத்தி
கரைத்துவை (அ)

10 வருவழியைப்பார்த்து நீயும்-வணக்கத்துடன் வீற்றிரு
உறுவழியைக்கண்டு நீயும்—உறுதியுடன் பிடித்திடு (அ)

---

ரா—கமாஸ்.

பல்லவி.

உத்தாரம் தாருமம்மா—ஒரு துணை யெனக்கில்லை
நின் உள்ளத்திலறிந்துமே

சரணங்கள்.

1 பெரு துணையாகியே பொருள் தந்திட
உறு துணையாகியே உடனிருப்பேனென்று (உத்)

2 இணையற்றதுணையே நீ என்னுடனிருக்கவே
புனையான பொன்னடியை போற்றியே ஏற்றினேன் (உத்)

3 நலமான உன்பாதம் பலமான துணையாக
வலம் வந்து வணங்கியே பணிந்துமே நின்றிட்டேன் (உத்)

---

ரா—தாண்டவநித்யசரி.

பல்லவி.

சரணமென்றே பணிந்தேன்-தாயேயுனை

சரணங்கள்.

1 சரணமென்றே பணிந்தேன் சரணபத்மமதனை
தருணமிதேயாள-தாயே நல்ல (சரண)

2 வஞ்சமனம் செய்யும் வாதனையாற்றுதனை
கெஞ்சியே பணிந்தேனே-தாயே உன்னை (சரண)

3 அருள் செய்வாய் தாயே அடியேன் துயர் நோக்கி
அடிமலர் தந்திடுவாய்-தாயே உந்தன் (சரண)

---

ரா—ராமாயணத்திருப்புகழ்

பல்லவி.

அற்புதமான ஸ்ரீசக்ரதேவியின்—பொற்பாதம் பணிப
வர்
பதம் பெறுபவர்—விதியை விலக்கி-மதியை துலக்கி
கதியைக்காட்டி-பதியை யளிக்கும் (அற்)

சரணங்கள்.

1 சிந்தாமணிக்ரஹவாசினி-ஸ்ரீதேவி
சின்மயரூபிணி-மனோன்மணி
பந்தம் நீக்கி-பார்வையாக்கி-சொந்தமாக்க-வந்தருளும்
(அற்)

2 ஹ்ரீம்கார பஞ்சாத்தில் இனிதமர்ந்திருப்பவள்
எங்கும் நிறைபவள்-ஏகமயமானவள்
சோக நீக்கி-சுகமாக்க-வேகமாக-வந்தருளும் (அற்)

3 ஏகமாயமரவே-யோகியர் வணங்கும்
நாக குண்டலினி-போகரூபிணி
கொடியமாயை-கொடியில் விலக.
அடிமலரை-அளித்து காக்கும் (அற்)

4 நான்மறைபோற்றி செய்யும்-ஞானஸ்வரூபிணி
நாதாந்த நாயகி-வரப்ரதாயகி
தேடுமடியார்-கூடிடவே—நாடி வந்து—நலமாயருளும்
(அற்)

5 அசுரசம்ஹாரி-அதிவீர ஒய்யாரி
ஆனந்தசுகுமாரி-அருண்மாரி
அரியதான—பெரியஞான— உரியமோன—துரிபநிறை
(அற்)

---

ரா—சாருஜதனகேத்ரி.

பல்லவி.

எந்தன் தாயே ஏது தாமதமே
உந்தன் சேயாமெனக்கே-இவ்வுலகேது சுகமே

சரணங்கள்.

1 இந்த ஜன்மம் வந்த நாளாய் பந்தநொந்தத்தில்
சிந்தை மயங்கும்-எனைப்பாரம்மா-பயம் தீரம்மா
பார்த்தேபவம் தீர்த்து ஆளாது (எந்)

2 உலகம் வந்து உதித்த நாளாய் உண்டோ ஓர்
சுகம் சொல்லம்மா-என் அகம் நில்லம்மா
நின்று மாயையை-வென்றிடச்செய்யாது (எந்)

3 பஞ்சையான எனைப்பார்த்தே கொஞ்சம்
நெஞ்சிரக்கம் வையம்மா-பக்ஷம் செய்யம்மா
அஞ்சேலென்று நீயும் ஆதரித்திடாது (எந்)

---

ரா—பியாக் கன்னிகள்.

1 கும்பலென்றே வம்புகள் செய்யாதே அம்பு ஜாக்ஷியே
தென்பளிக்கும் உந்தன் திருவடிநம்பியே நீனேயும் வந்தேனே

2 உந்தனொளியே உயர் குருவுருவாய் உலகம் ஈடேற
அந்தமாய் வந்திடும் செய்தியறிந்தே ஆவலாய் வந்தேனே

3 வந்திட்டயெந்தனைவாது புரியாது வழியுமளிப்பாயே
நொந்திட்ட பிறவிக்கு தந்திட்டு நின்னருள் தாபம் தணிப்பாயே

4 திருவடிபெயர்த்த தேசிசரூபமாய் திருவருள் புரிவாயே

ஒருவழியறியா இப்பேதையையுந்தன் உளத்தில் நினைப்பாயே

5 தருணமிதுவே தவறவிடாதே தாயே ஈசுவரியே
கருணைபுரிந்து கலக்கம் நீக்கிகடைத் தேறச்செய்வாயே

6 சமயமிதில் கைவிட்டு என்னை சஞ்சலம் செய்யாதே
உமையவளே எனக்கொருவழி காட்டி திருவருள் புரிவாயே

---

பல்லவி.

சாரதே-ஏ-அம்பா-எனக்காறுதலளித்திடுவாய்

சரணங்கள்.

1 சத்குரு பூஜாமுகம்-சந்தோஷமாக விற்று
அத்புதமாக்விளங்கி-தத்பதமாகபொங்கும்-தாயே
யெந்தனையும் தாமரைபாதம் சேர்ப்பாய் (சா)

2 தாபத்ரயாக்கினியின் தாபத்தை தாங்காது
தனல்கண்டபுழுப்போலும்-மணல்கண்டமீன்போலும்
மாது தவித்துமே-மலரடி தேடி வந்தேன் (சா)

3 ஆசார்யாள் பூஜைபுரிய-ஆனந்தமாக விளங்கும்
ஆச்சர்ய மூர்த்தியே யென்வாத்சல்ய தேவி நீ
வாவென்றழைத்தென்னை-வாழ்வையளித்திடுவாய்

---

பல்லவி.

இத்தனை பராமுகமாகுமோ தாயே-ஏழையெந்தன் மேல்

சரணங்கள்.

1 சக்கர ரூபியே சாந்தமாம் தேவியே உனைச்சார்ந்து வந்தேனே

அக்கரையாகவே ஆதரித்திட வேறு யாருண்டுலகிலே
(இத்)

2 அபன்மை உருவாகி அகிலத்தை நாடி ஆடி அலுத்
தேனே
பயமது தீர்த்தே பாதத்தில் சேர்த்து பார்த்தருள்
செய்வாய் (இத்)

3 காலன் அழித்திடும் கட்டையாமுடலை சுமந்து கசந்
தேனே
ஜாலமா மெந்தன் காலமுமாகுமுன் களிப்பை யளிப்
பாயே (இத்)

4 மாயையாம் பேயை மதித்துறவாடி மயங்கியழிந்
தேனே
தாயான உன்னருள் தாளிணைத்துமே தாவிவந்தேனே
(இத்)

5 நாடகசாலையாகுமுலகில் நடித்தே அயர்ந்தேனே
வாடலை தீர்த்தே வழியது காட்டி வாழ்வையளிப்பா
யே (இத்)

6 மந்திரமறியேன் மதியுமில்லேன் மார்க்கத்தையறிந்திட
யந்திரதேவியே தந்திர முரைத்து தாளிணை தந்திடு
வாய் (இத்)

7 பக்தியுமறியேன் பாவனை செய்யேன் முக்தியும் பெற்
றிட சக்தியே உந்தன் சித்தமிரங்கி சாந்தமளித்திடு
வாய் (இத்)

8 எத்தனை நாட்கள் செல்லுமோவென்று ஏங்குதே
நெஞ்சமும்
சித்தம் தெளியவே சிலம்பணி பாதத்தில் சீக்கிரம்
சேர்த்திடுவாய் (இத்)

ரா—நேகட்

1 ஹேஸிம்மாசனேச்வரி—ஸ்ரீசக்ரராஜேச்வரி—சர்வபுவனேச்வரி
இம்மாயப் - பிறவியின் -அம்மாயத்- தொடர்பறுத்து-
சும்மாயிருக்கச்செய்வாய்
சுகநிலை தந்திடுவாய்—அகவினை தீர்த்திடுவாய்

2 ஹேராஜராஜேச்வரி-நடராஜமனோஹரி-ஜீவதயாபரி
ச்யாமளையே-நீயுமிப்போ-தாமதமே - செய்யாது-தயவுடன் நோக்கிடுவாய்
தாளினை தந்திடுவாய்-தாபங்கள் நீங்கிடவே

3 ஹே ஆனந்தசுகுமாரி—அருண்மேக கருணைமாரி—அடியரிதயவாரி
அன்புள்ளில்-பெருக்கியே-துன்பங்கள் நீக்கியே-இன்பமளித்திடுவாய்
எந்தனைப்பார்த்திடுவாய்-ஏக்கங்கள்நீங்கிடவே

4 ஹேதிருபுரசுந்தரி-தீனரக்ஷாகரி-ஞானஸம்பத்கரி
அன்னையே-இன்னமும்-இன்னலே-வாறுது-ஏழையை
காத்திடுவாய்
இரங்கியே நோக்கிடுவாய்-எழிலடி தந்திடுவாய்

---

0825:417 N2

ரா—இந்திரஸபா

1 தாயே உன் பாதம் தஞ்சமென்றே இப்பஞ்சையானும்
ஓடிவந்தேன்-அஞ்சலெல்லாம் தீரவென்னை ஆதரித்தே
காத்திடுவாய்

2 ஏழை யெந்தன் முகத்தைப்பார்த்தே இரங்கி நீயும்
அருள் தருவாய்
கோழைப்பிறவி பயமுநீக்கி குளிர்கருணை செய்திடுவாய்

17450

3 ஜன்மசுகம்போதுமம்மா-சிலம்பணி பாதம் தந்திடுவாய்
கன்மவினை தீர்த்துஎன்னை களிப்புதவச்செய்திடுவாய்

4 தாபங்களும் தாங்கவில்லை தன்னருளைத் தந்திடுவாய்
பாபம் நீங்க பாவை யென்னை நின் பார்வையிலே வைத்
திடுவாய்

5 சொந்தமான பந்தமெல்லாம் விந்தையாக விலக்கிற்
றம்மா
அந்தமான அடிமலரை எனக்காதரவாய் அளியம்மா

---

ரா—குதம்பைசித்தர்பாடல்.

1 தன்னை மறந்தந்த தனியின்பம் நாடுவோர்க்கும்
உன்னை நினைத்தல் வேண்டும்-தாயே
உன்னை நினைத்தல் வேண்டும்

2 ஆதாரம் ஆறும்தாண்டி அப்பாலே செல்வோர்க்கும்
நின்னாதாரம் வேண்டும் தாயே
நின்னாதாரம் வேண்டும்

3 பாசத்தை விட்டகன்று பற்றறும் ஞானியர்க்கும்
உன் நேசமது வேண்டும் தாயே
உன் நேசமது வேண்டும்

4 ஆதியந்தமற்ற ஜோதியும் சுகமுற
நீ பாதியாயமரவேண்டும்-தாயே
நீ பாதியாயமரவேண்டும்

5 காக்கவே வந்திட்ட கரியமால் தொழிலுக்கும்
நீ நீங்கிடாதிருக்கவேண்டும்-தாயே
நீ நீங்கிடாதிருக்கவேண்டும்

6 படைப்பு தொழில்பெற்ற பங்கயாசனனுமே

நினை பகர்ந்தே பணியவேண்டும்-தாயே
நினை பகர்ந்தே பணியவேண்டும்

7 ஈரேழ் புவனங்கள் எழில் பெற்றே உய்திட
நின் சீரடி பணியவேண்டும்-தாயே
நின் சீரடி பணியவேண்டும்

8 காத்திடுமிவ்வேழை கடைத்தேறி வாழ்ந்திட
நின் கடைக்கண்ணருள் வேண்டும்-தாயே
நின் கடைக்கண்ணருள் வேண்டும்

---

ரா—இங்கிலீஷ்நோட்.

ஸ்ரீராஜ ராஜ ஈச்வரியின் சக்ர ராஜ ஈச்வரியின் சர்வ
புவன ஈச்வரியின் பாதம் பணிவோமே—நா-லு-வே—
தம் மேலுமோத- வலாநாத-பாதம் பணிவோமே
அடியரிதய குமுதமலரகோடி அருணனெனவே
உதித்திடும்- அருளைவீசி இருளை நீக்கி எழில் மதி
யெனவே இலங்கிடும்-சொந்-த-மா-ன அன்னை
பாதம்-அநுதினமும்-அமர்ந்து பணிவோமே-களங்
கொளாதோருளங்கொள் ஞானச்சிலம்பணிபொற்
றுளினை—நினைக்குமன்பர் நிலைக்க நிறுத்தி—அலைக்கும்
பிறவி
அகற்றிடும்-வஞ்-ச-நெஞ்-ச-அஞ்சல் தீர அநு
தினமும் அமர்ந்து பணிவோமே

---

ரா—தோடி.

பல்லவி.

அருள் தர வா-வா-அம்மா
அடிபணிந்து காக்கும் ஏழைகரு (அ)

அநுபல்லவி.

அடி பணிந்து காக்கும் ஏழையை-ஆதரிப்பாய்-தாயே
ஆதரிப்பாய்
முடியாம் வேத-முடிவாம்நாத-வடிவாம்போத-அடியா
யாம்பாத (அ)

சரணங்கள்.

1 தீன தயாபரி நீயன்றோ-அம்மா
தீனர்கட்கே நல் உறவன்றோ
ஆனபொருளே யென் அறிவதனுணர்த்தி-ஞானமாம்
இன்பம்-நலமுறபெருக்கிடும் (அ)

2 சர்வஜகன்மாதா நீ யன்றோ-அம்மா
சர்வதர்மாதிபதியன்றோ
கர்மத்தை விலக்கியான்—களிப்புறவோங்கும்—மர்மத்
தை நீக்கியே-மலாடியளித்திடும் (அ)

---

ர— திருப்புகழ்-இசைந்தருலம்.

1 திருவிரலதனில் அணி நூபுரங்கள் இசையொலியார்ப்ப
நிசைமுகனரி அரன் மகிழ்ந்தே திருவருள் நோக்க

2 நலம்புரி பாதமணி சிலம்பின் கதிரொளிவீச
வலம்புரிந்தே நிலம்பணியும் முச்சுடர் துளியேற்க

3 பொற்சிலம்பின் பொருந்து மணிகள் ஒலியார்க்க
பொருந்துவேதம் புரிந்து கீத காத மேற்க

4 உலகமொடுங்கும் ஒரு கை சிறு விரற்கணையாழி
உதிக்கு மீள ஒளியுறவே அவள் அருளாழி

5 தண்ணருள் நிறை தாமரைக்கண்ணின் கடைநோக்கி
எண்ணரிய அடியர் பணிவர் எதிர் நோக்கி

---

ரா—இந்துஸ்தான்—கோடிமனேஜி

பல்லவி

சித்தமுமெத்தக்கலங்கியே தானிச்சிறியாளுமுன்
பாதம் ஓடிவந்தேன் (எந்தன்)

சரணங்கள்.

1 அன்னையே பார்ப்பாய்-ஆதரித்துக்காப்பாய்
என்னையுமீடேற்றிட - (சேயாமென்) (சித்)

2 கவலையைத்தீர்ப்பாய்-களிப்புறச்சேர்ப்பாய்
அவலமேயாகிடாது (ஜன்மம்) (சித்)

3 இணையுனக்காரோ-துணையெனக்கேதோ
அணைத்தருள் தந்திடுவாய் (எனை) (சித்)

---

ரா—இந்துஸ்தான்-கோட்.

மங்களம்.

1 மங்களகாமாகவே தான் மகிழ்ந்து எங்கும் காப்பவள்
மங்களங்கள் பொங்கிபளிக்க அம்மலரடியை வேண்டி
யே
சங்கை நீக்கி-பங்கமின்றி-அங்கமுருகிப்பணிவோமே

2 நித்யஜயமங்களமாய் நின்றிலங்கும் அம்பாளை
நித்ய சுபமங்களங்கள் எத்தினமுமளித்திட
சுத்தமான-சித்தம் வைத்து-பக்தியுடனே பணிவோ
மே

3 சுபங்கள் பெருக்கியளிக்கும் திரிபுர சுந்தரியின் பாதத்

சுபங்கள் பெருகிட நாமும் சூழ்ந்து நின்று போற்றியே
சுபம் பெருக-பவம் விலக-தவம் பலிக்க பணிவோமே

---

O25:417 N26
176450
17645
176450

ஸ்ரீ

ஸ்ரீ வாணீ

விலாஸ் பிரஸ்

ஸ்ரீரங்கம்

ஸ்ரீ